**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரக்கோணம்**

**முன்னிலை**: செல்வி.அ.அமீனா, B.B.A., L.L.B (Hons).,

நீதித்துறை நடுவர் எண். 1 (மு.கூ.பொ),

அரக்கோணம்.

2026ம் ஆண்டு மார்ச் 09ம் நாள் திங்கள்கிழமை

**C.C.No.37/2024**
**(CNR.No.TNRP09-002277-2024)**

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்,
அரக்கோணம் நகர காவல் நிலையம்,
குற்ற எண்.120/2022. ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1. சுரேந்தர், வயது–22,
த/பெ. தேவதாஸ்,
நெ. 192, அன்னை தெரசா தெரு,
விண்டர்பேட்டை,
அரக்கோணம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.

2. விக்கி (விக்னேஷ்), வயது–25,
த/பெ. யோவான்,
நெ. 191, அன்னை தெரசா தெரு,
விண்டர்பேட்டை,
அரக்கோணம்,
இராணிப்பேட்டை மாவட்டம். ... எதிரிகள்

இவ்வழக்கு 30.07.2024 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 09.03.2026ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர்

தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ராஜசேகர் அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

24.04.2022ம் தேதி பிற்பகல் 11.00 மணிக்கு அரக்கோணம் நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அரக்கோணம் இரயில்வே மருத்துவமனை அருகே முன் விரோதம் காரணமாக எதிரிகள் புகார்தாரர் பால்தினகரனை பார்த்து தெவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி, அங்கிருந்த கட்டையால் புகார்தாரர் பால்தினகரனை கட்டையால் தாக்கி, உன்னை ஒழித்துவிடுவோம் என்று மிரட்டியதாக எதிரிகளாகிய இருவரும் இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழ் அரசு தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் அனைத்து நகல்களும் எதிரிகளுக்கு BNSS பிரிவு 230 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3.இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழும், 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)

ன் கீழ் முதல் நோக்கு தோன்றியதால் குவிமுச பிரிவு 240–ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எதிரிகள் குற்றத்தினை மறுத்தமையால் குவிமுச பிரிவு 242–ன் படி அரசு தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் விவரம் பின்வருமாறு</u>**:–

அரசுதரப்பில் பட்டியல் சாட்சி–1 முதல் பட்டியல் சாட்சி–8 வரை சாட்சிகள் கொடுக்கப்பட்டு, பட்டியல் சாட்சி–4 முதல் பட்டியல் சாட்சி–8, வரை விசாரிக்காமல் விட்டொழிக்கப்பட்டு, கூடுதல் சாட்சியாக அரக்கோணம் நகர காவல் நிலைய முதல் நிலை காவலர் அசோக்குமார் பட்டியல் சாட்சி–9 ஆக சேர்க்கப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 வரை விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசுதரப்பில் சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>அரசுதரப்பு வழக்கின் சுருக்கம்</u>**:–

(i) அ.சா.1 பால்தினகரன், அ.சா.2 வின்சன்பால்ராஜ், அ.சா.3 பாலாஜி ஆகியோர் உறவினர்கள் ஆவார்கள். 24.02.2022ம் தேதி மாலை 5 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தரபாண்டியன் நிலைய பொறுப்பில் இருந்தபோது பால்தினகரன் த/பெ ஜேம்ஸ் என்பவர் நிலையம் ஆஜராகி

கொடுத்த புகாரினை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற 120/2022 இதச பிரிவுகள் 294(b), 324, 506(2)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே பிற்பகல் 5.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மூர்த்தி, ஜெயகுமார் என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் அ.சா.ஆ 3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ–4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. பிறகு பட்டியல் சாட்சி 1முதல் 6 வரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற முன்பிணையில் சென்றதால் கைது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

8. பிறகு அ.சா.1 பால்தினகரனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பரணிசங்கரை விசாரணை செய்து அ.சா.1 பால்தினகரனுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என விபத்து பதிவேடுடன் கூடிய காயச் சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அ.சா.1 பால்தினகரனின் விபத்துபதிவேடுடன் கூடிய காயச் சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.

9. விசாரணையில் எதிரிகள் மீது முதல் நோக்கு தோன்றியதால் சிறப்பு உதவி ஆய்வாளர் சுந்தரபாண்டியன் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

10. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313 கீழ் வினவிய போது சாட்சிகள் கூறுவது பொய் என்றும் பொய் வழக்கு என்றும் தெரிவித்தார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

11. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்</u>**:–

எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

12. அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

13. எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால்

நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

14. குற்றவியல் வழக்குகளில் நிரூபிக்கும் சுமையானது அரசு தரப்பினை சார்ந்துள்ளது என்று இ.சா.ச. சட்டப்பிரிவு 101 இன் கீழ் காணப்படுகிறது.

15. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுதரப்பில், பால்தினகரன் அ.சா.1 ஆகவும், வில்சன் பால்ராஜ் அ.சா.2 ஆகவும், பாலாஜி அ.சா.3 ஆகவும், முதல் நிலை காவலர் அசோக்குமார் அ.சா.4 ஆகவும் விசாரணை செய்யப்பட்டு, புகார் அ.சா.ஆ–1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், அ.சா.1 பால்தினகரனின் விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று அ.சா.ஆ.5, ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 பால்தினகரன் தனது முதன்மை சாட்சியத்தில் தான் அரக்கோணத்தில் வசித்து வருவதாகவும், 24.04.2022ம் தேதி காலை 11.00 மணிக்கு அரக்கோணம் இரயில்வே மருத்துவமனை அருகே நான் வேலைக்கு சென்றுவிட்டு திரும்பி வந்தபோது எதிரிகள், என்னை வழிமறித்து கட்டையால் அடித்ததாகவும், எனது அண்ணன் வின்சன் பாலுக்கு தகவல் தெரிவித்து அவர் வந்து தன்னை அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், ராமு, சரவணன் என்பவரது ஒப்பந்தம் சம்மந்தமாக

தனது அண்ணன் பஞ்சாயத்து பேசியதால் பஞ்சாயத்தில் ராமுக்கு உடன்பாடு இல்லாததாலும், அதன் காரணமாக ராமுவின் நண்பர்களான எதிரிகள், தன்மை அடித்ததாகவும், இது சம்மந்தமாக தான் போலீசில் புகார் கொடுத்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்து சாட்சியம் அளித்திருந்த போதிலும், தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " எதிரிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறேன் என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

17. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 வில்சன்பால்ராஜ் தனது சாட்சியத்தில் தான் அரக்கோணத்தில் வசித்து வருவதாகவும், அ.சா.1 பால்தினகரன் தனது சகோதரர் என்றும், 24.04.2022ம் தேதி காலை 11.30 மணிக்கு சரவணன், ராமு என்பவருக்கு இடையே ஒப்பந்த பிரச்சனை சம்மந்தமாக பஞ்சாயத்து பேசியதாகவும், அப்போது எனது தம்பி அரக்கோணம் இரயில்வே நிலையத்திற்கு சென்றபோது இரயில்வே மருத்துவமனைக்கு பக்கத்து தெருவில் தனது தம்பியை, விக்கி, சுரேந்தர் கட்டையால் அடித்தாகவும், தனக்கு போன் மூலம் தகவல் கிடைததால் நான் எனது தம்பியை அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றதாகவும், நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள

வெள்ளை சட்டை, பிரவுன் நிற பேன்ட் அணிந்த நபர் சுரேந்தர், வெள்ளை சட்டை, சிமெண்ட் பேன்ட் அணிந்த நபர் விக்கி அகிய நபர்கள் தான் என் தம்பியை தாக்கியதாகவும், போலீசார் தன்னை விசாரித்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்து சாட்சியம் அளித்திருந்த போதிலும், தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் " எதிரிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக நான் எதிரிகளுடன் சமாதானமாக செல்கிறேன் என்றால் சரிதான்" சாட்சியம் அளித்துள்ளார். இவர் அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

18. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.3 பாலாஜி தனது சாட்சியத்தில் தான் விண்டர் பேட்டையில் வசித்து வருகிறேன் என்றும் அ.சா.1 பால்தினகரன், அ.சா.2 வில்சன் எனக்கு தெரியும் என்றும், எனது பகுதியை சேர்ந்தவர்கள் என்றும், 2022ம் வருடம் தேதி, மாதம், ஞாபகமில்லை என்றும், தனது தம்பி தினகரன் அரக்கோணம் ரயில்வே ஸ்டேசன் சென்று கொண்டிருந்தபோது விண்டர்பேட்டை அருகே அடையாளம் தெரியாத நபர்கள் அசிங்கமாக பேசி, தாக்கியதாகவும், சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்ததாகவும், தற்போது எதிரிகளுக்கும் எங்களுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிப்பதில் ஆட்சேபனை இல்லை என்றும் போலீசார் என்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவர்

அரசு தரப்பால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

19. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரை அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் முதல் நிலை காவலர் அ.சா.4 சாட்சியத்தை மட்டுமே வைத்துக் கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாக கருத முடியாது.

20. இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து நோக்குமிடத்து இந்த வழக்கில் அரசு தரப்பால் விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிக்கு எதிராகவும், எதிரி தன்னை அசிங்கமாக பேசி தாக்கி மிரட்டியதாக அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காததாலும், அ.சா.2 மற்றும் அ.சா.3 வழக்கின் புகாருக்கோ அல்லது குற்ற இறுதி அறிக்கைக்கோ ஒத்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதாலும், அ.சா.4 ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளதால் அவரின் சாட்சியத்தினை மட்டும் வைத்துக் கொண்டு எதிரிகள் குற்றம் புரிந்ததாக கருத இயலாது என்பதாலும் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டும் வகையில் சாட்சிகள் இல்லாததாலும், எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியம், சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு

இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

21.இறுதியாக, மேற்சொன்ன காரணங்களால் எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 324, 506(i) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியம், சான்றாவனங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி குற்றவாளி இல்லை என்று குவிமுச 248(1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

22. இந்த வழக்கில் அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, எனவே சான்று பொருள் பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எதிரிகள் எழுதிக்கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க தட்டச்சர் உடனுக்குடன் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ஆண்டு மார்ச் 9ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ),
அரக்கோணம்.

**இணைப்பு**:

1. **அரசுதரப்பு சாட்சிகள் பட்டியல்**:

| | |
|---|---|
| அ.சா.1 | பால்தினகரன் |
| அ.சா.2 | வில்சன் பால்ராஜ் |
| அ.சா.3 | பாலாஜி |
| அ.சா.4 | அசோக்குமார் ( முதல் நிலை காவலர்) |

2. **அரசுதரப்பு சான்றாவணங்கள் பட்டியல்**:

| **Exhibits** | **Date** | **Description of Documents** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 10.06.2022 | புகார் வாக்குமூலம். |
| அ.சா.ஆ.2 | 10.06.2022 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.3 | 30.07.2024 | மாதிரி வரைபடம். |
| அ.சா.ஆ.4 | 30.07.2024 | பார்வை மகஜர். |
| அ.சா.ஆ.5 | 30.07.2024 | அ.சா.1 பால்தினகரனின் விபத்து பதிவேடு மற்றும் காயச் சான்று. |

3. **அரசுதரப்பில் சான்று பொருள்**: இல்லை.

4. **எதிரிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள், சான்று பொருள்:–** இல்லை.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC) ,
அரக்கோணம்.

**<u>நகல்கள்:–</u>**

1.மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், இராணிப்பேட்டை

மாவட்டம்.

2.அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை–2.

3.காவல் ஆய்வாளர், நகர காவல் நிலையம்.

**<u>குறிப்பு:–</u>**

1. அரசுதரப்பில் சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.
2. எதிரிகள் வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்தார்.

AMEENA A

Judicial Magistrate No.1, Arakkonam
Digitally signed by AMEENA A
DN: cn=AMEENA A, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

நீதித்துறை நடுவர் எண்.1(FAC),
அரக்கோணம்.